மாநகராட்சி பள்ளிகளின் தேர்ச்சி 90 சதவீதமாக உயர்வு

சென்னை, ஆக. 9: சென்னை மாநகராட்சி பள்ளிகளின் தேர்ச்சி 50 சதவீத்திலிருந்து தற்போது 90 சதவீதமாக அதிகரித்துள்ளது என மருத்துவம், மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், அடையாறு, மடுவின்கரை சென்னை மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 197 மாணவ, மாணவிகளுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் புதன்கிழமை மிதிவண்டிகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசியது:

சென்னையில் உள்ள 3 பள்ளிகளில் புதன்கிழமை மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மடுவின்கரை பள்ளியில் மாநகராட்சி சார்பில் விரைவில் கலையரங்கம் அமைக்கப்படும். இந்தப் பள்ளியில் விளையாட வசதி இல்லாத நிலையில் அருகில் உள்ள பள்ளி மைதானத்தில் விளையாட ஏற்பாடு செய்து தரப்படும். மாநகராட்சி பள்ளிகளில் 1995-ஆம் ஆண்டு வரை 50 சதவீமாக இருந்த மாணவர்களின் தேர்ச்சி தற்போது 90 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றார் அவர்.

நிகழ்ச்சியில், மேயர்ஆர்.பிரியா, துணை மேயர் மு. மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் ஆர். துரைராஜ், மாமன்ற உறுப்பினர் மோகன் குமார், கல்வி அலுவலர் மற்றும் உதவிக் கல்வி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பள்ளி மாணவர்களுக்கு நீட், ஜேஇஇ பயிற்சி

சென்னை, ஆக. 9: சென்னை பள்ளி மாணவர்கள் நீட், ஜேஇஇ உள்ளிட்ட போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் 'அகாதெமி ஆஃப் ஸ்டெம் எக்ஸ்செலன்ஸ்' எனும் பயிற்சியை மேயர் ஆர்.பிரியா புதன்கிழமை தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் நிகழாண்டு நிதி நிலை அறிக்கையில் சென்னை பள்ளிகளில் பயிலும் சிறந்த மாணவர்களை பொதுத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நேரடியாகவும் இணையதளம் வழியாகவும் நடைபெறும் போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சென்னை பள்ளிகளில் பயின்று பிளஸ் 1-இல் அதிக மதிப்பெண்கள் பெற்ற 35 மாணவ, மாணவியருக்கு பொதுத் தேர்வுடன் கூடிய நீட், க்யூட், க்ளாட், ஜேஇஇ, ஐசிஏஆர், என்டிஏ, என்ஏடிஏ, என் ஐஎஃப்டி உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளுக்கு 'அகாதெமி ஆஃப் ஸ்டெம் எக்ஸ்லென்ஸ்' எனும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

சென்னை பள்ளிகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான 'அகாதெமி ஆஃப் எக்சலென்ஸ்' எனும் பயிற்சியை நுங்கம்பாக்கம் சென்னை மேல்நிலைப் பள்ளியில் புதன்கிழமை தொடங்கி வைத்த மேயர் ஆர்.பிரியா. உடன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆயிரம் விளக்கு சட்டப்பேரவை உறுப்பினர் நா.எழிலன் உள்ளிட்டோர்.

இதில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு தங்கும் விடுதியுடன் கூடிய தமிழ் மற்றும் ஆங்கில வழியில் பயிற்சி வழங்கப்படும். அவர்கள் பள்ளிக்குச் சென்றுவர போக்குவரத்து வசதி, மெய்நிகர் வகுப்பறை, கையடக்கக் கணினி, 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் கொண்ட நூலக வசதியுடன் அனுபவமிக்க ஆசிரியர் குழுக்களால் பயிற்சி வழங்கப்படுகிறது.

இதைச் செயல்படுத்தும் வகையில் நுங்கம்பாக்கம் சென்னை மேல்நிலைப் பள்ளியில் பயிற்சி நடைபெறும் கட்டடத்தை மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், ஆயிரம் விளக்கு சட்டப்பேரவை உறுப்பினர் நா.எழிலன், துணை மேயர் மு. மகேஷ்குமார், துணைஆணையர் (கல்வி) ஷரண்யா அறி, நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, கல்வி அலுவலர் மற்றும் உதவிக் கல்வி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஓணம்: ஆக.29-இல் உள்ளூர் விடுமுறை

சென்னை, ஆக. 9: ஓணம் பண்டிகையை முன்னிட்டு, ஆக.29-ஆம் தேதி சென்னை மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை மாவட்ட ஆட்சியர் மு.அருணா செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரசு ஆணைப்படி அறிவிக்கப்பட்டுள்ள இந்த உள்ளூர் விடுமுறைக்கு பதிலாக செப்.2-ஆம் தேதி (சனிக்கிழமை) சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களுக்கு பணிநாளாக அறிவிக்கப்படுகிறது.

இருப்பினும், உள்ளூர் விடுமுறைநாளான ஆக.29-ஆம் தேதி அவசர அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு, சென்னை மாவட்டத்திலுள்ள கருவூலம் மற்றும் சார்நிலை கருவூலங்கள் குறிப்பிட்ட பணியாளர்களைக் கொண்டு செயல்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

உதவி ஆராய்ச்சி அலுவலர் பணி: ஆக.25-க்குள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஆக.9: இந்திய முறை மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவில் காலியாகவுள்ள உதவி ஆராய்ச்சி அலுவலர் பணியிடத்துக்கு ஆக.25-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் மு.அருணா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்த பணியிடத்துக்கு ரூ.20,000 தொகுப்பூதியத்தில், தற்காலிக அலுவலர் பணியமர்த்தப்படவுள்ளனர். இதற்குத் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பத்தை http://www.tnhealth.tn.gov.in என்ற சுகாதாரத் துறையின் இணையதள முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அரும்பாக்கம், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை இணைப்பு வளாகத்திலுள்ள இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவு இயக்குநருக்கு ஆக.25-ஆம் தேதி மாலை 5 மணிக்குள் கிடைக்கும் படி அனுப்பி வைக்கவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

தங்கம் பவுனுக்கு ரூ.80 குறைவு

சென்னை, ஆக. 9: ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.80 குறைந்தது.

சென்னையில் புதன்கிழமை ஆபரணத்தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ரூ.5,530-க்கும், பவுனுக்கு ரூ.80 குறைந்து ரூ.44,240-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு 60 காசுகள் குறைந்து ரூ.76.70-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.600 குறைந்து ரூ.76,700-க்கும் விற்பனையானது.

ஆடி கிருத்திகை வழிபாடு...

ஆடி கிருத்திகையையொட்டி, வடபழனி முருகன் கோயிலில் தரிசனத்துக்காக புதன்கிழமை காத்திருந்த பக்தர்கள் கூட்டத்தின் ஒரு பகுதியினர். (இடது) சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த உற்சவர்.

போலி ஐஎஸ்ஐ முத்திரையுடன் குடிநீர் ஆலை: அதிகாரிகள் சோதனை

சென்னை, ஆக. 9: இந்திய தர நிர்ணய அமைவன சென்னை பிரிவு அதிகாரிகள் குழு, திண்டிவனம் வட்டம் மொளச்சூர் என்ற பகுதியில் உள்ள தனியார் குடிநீர் ஆலையில் புதன்கிழமை சோதனை மேற்கொண்டனர்.

அப்போது போலி ஐஎஸ்ஐ முத்திரையுடன் கூடிய 20 லிட்டர் கேனில் குடிநீரை நிரப்புவது கண்டறியப்பட்டு, 46 குடிநீர் கேன்கள், போலியான ஐஎஸ்ஐ முத்திரையுடன் கூடிய நிறுவன உரிமத்தை அதிகாரிகள் கைப்பற்றினர்.

போலியான பிஐஎஸ் உரிமத்தைப் பயன்படுத்தி நிறுவனத்தை நடத்தி வந்ததால் உரிமையாளர் மீது இந்திய தர நிர்ணய அமைப்புச் சட்டம் 2016-இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என பிஐஎஸ் சென்னை கிளை அலுவலகத் தலைவர் ஜி.பவானி தெரிவித்தார்.

இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது ரூ. 2,00,000 வரை அபராதம் விதிக்கப்படும்.

எனவே, பொது மக்கள், இதுபோன்ற தகவல் தெரிந்தால், பிஐஎஸ் சென்னை கிளை அலுவலகம், சிஐடி வளாகம், 4-ஆவது குறுக்கு சாலை, தரமணி, சென்னை - 600 113 என்ற முகவரிக்கு தகவல் அளிக்கலாம் என பிஐஎஸ் அமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PARRYS

ஈ.ஐ.டி.-பாரி (இந்தியா) லிமிடெட்

murugappa

CIN : L24211TN1975PLC006989
பதிவு அலுவலகம்: 'டேர் ஹவுஸ்,' பாரீஸ் கார்னர், சென்னை - 600 001.
Tel: 044 – 2530 6789, Fax: 044-25306930
Web : www.eidparry.com, E-mail Id : investorservices@parry.murugappa.com

ஜூன் 30, 2023 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கை செய்யப்படாத ஒட்டுமொத்த நிதிநிலை முடிவுகள்

(ஒரு பங்கு தரவு தவிர ரூ. கோடிகளில்)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு 30.06.2023	முடிவடைந்த ஆண்டு 31.03.2023	முடிவடைந்த காலாண்டு 30.06.2022
1	செயல்பாடுகளின் மூலம் மொத்த வருமானம்	7,026.45	35,243.80	7,143.81
2	அசாதாரண வகைகள் சிறுபான்மை பாத்தியதைக்கு முன் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	476.58	2,520.05	620.90
3	அசாதாரண வகைகளுக்கு பின் சிறுபான்மை பாத்தியதைக்கு மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	476.58	2,564.25	665.10
4	சிறுபான்மை பாத்தியதை மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	108.86	947.48	276.24
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின்)	380.59	1,737.25	471.20
6	சமபங்கு மூலதனம் (ஒரு சமபங்கு தோற்ற மதிப்பு ரூ.1/-)	17.75	17.75	17.74
7	ரிசர்வுகள் மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக		6,067.09	
8	பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒரு பங்கிற்கு ரூ.1) (ரூ)			
	அ) அடிப்படை	6.13	53.39	15.57
	ஆ) குறைமதிப்பு	6.11	53.25	15.53

குறிப்பு :

1 மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் ஆகஸ்ட் 08, 2023 அன்று தணிக்கைக் குழுவால் பரிசீலனைக்கு உள்ளாகி பரிந்துரை செய்யப்பட்டு அவை ஆகஸ்ட் 09, 2023 அன்று நடைபெற்ற இயக்குனர் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டன.

2. தனிப்பட்ட நிதிநிலை முடிவுகளின் கூடுதல் தகவல் பின்வருமாறு

விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு 30.06.2023	முடிவடைந்த ஆண்டு 31.03.2023	முடிவடைந்த காலாண்டு 30.06.2022
செயல்பாடுகளின் மூலம் வருமானம்	698.41	2894.92	719.07
வரிக்கு முன் லாபம் / (நஷ்டம்)	(61.81)	244.51	14.39
வரிக்கு பின் லாபம் / (நஷ்டம்)	(45.77)	196.82	13.14
மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின்)	(45.25)	211.87	12.87

3. மேற்குறிப்பிட்டவைகள் SEBI (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015, 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜூன் 30, 2023 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டுமொத்த நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரங்கள் ஆகும். காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் நிறுவனத்தின் www.eidparry.com மற்றும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் www.bseindia.com மற்றும் www.nseindia.com இணையதளங்களிலும் காணலாம்.

இயக்குனர்கள் குழுவின் சார்பில்
S. சுரேஷ்
மேலாண்மை இயக்குனர்

தேதி : ஆகஸ்ட் 9, 2023
இடம் : சென்னை

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 15வது மாடி, பிஎஸ் ஸ்ரீஜன் டெக் பார்க், பிளாட் எண் 52, பிளாக் டிஎன், செக்டர் V, சால்ட் லேக் சிட்டி, கொல்கத்தா - 700 091. மாவட்டம் 24-பர்கனாஸ் வடக்கு.
CIN No.: U65910WB1993PLC060810
கிளை அலுவலகம்: சென்னை

L&T Finance

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிடைசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிடி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்தை **"இருக்கும் இடம்"** மற்றும் **"இருக்கும் நிலை"** என்ற அடிப்படையில் **"பொது ஏலம்"** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணைய சொத்து முகவரி	கடன் கணக்கு எண்	சொத்து கையகப்படுத்தப்பட்ட விவரம்	சிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	03.08.2023 அன்று பஜு மொத்தம் நிலுவை பாக்கி தொகை	சிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. சரளா எஸ் 2. சங்கர் எஸ்	சொத்து முகவரி: - கட்டிடத்துடன் கூடிய நிலம், 1680 சதுர அடி நில பரப்பு, சர்வே எண். 7/2, டி.எஸ். எண். 36, பிளாக் எண். 9, பள்ளிப்பட்டு கிராமம், முன்பு மயிலாப்பூர் - திருவல்லிக்கேணி தாலுகா, தற்போது வேளச்சேரி தாலுகா, சென்னை மாவட்டம் மற்றும் பழைய கதவு எண். 23/ஏ, புதிய எண்.43, கஸ்தூரிபா நகர், வி மெயின் ரோடு, அடையாறு, சென்னை தமிழ் நாடு 600020 மற்றும் இதன் எல்லைகள்:	CHNHL15000516	ஜூலை 17, 2023	₹23,85,622.40/-	₹6,832,992.05/-	₹2,38,56,224/-	08/09/2023	13/09/23 காலை 11 மணிக்கு

எல்லைகள்	கிழக்கு	சக்கரவர்த்திக்கு சொந்தமான சொத்து
	மேற்கு	கணேச பாலக் ரோடு
	வடக்கு	கஸ்தூரிபா நகர் வி மெயின் ரோடு
	தெற்கு	அசீம் உன்னிஷா பேகத்திற்குச் சொந்தமான சொத்து

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மின்னணு ஏல விற்பனை, சர்ஃபேஸி சட்ட பிரிவுகளின் கீழ் மற்றும் பொது மின்னணு ஏல முறை மூலம் https://sarfaesi.E-auctiontiger.net இணையதளம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆன்லைனில் நடத்தப்படுகிறது.
2. இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நாள் அன்று மற்றும் நேரத்தில் பொது மின்னணு ஏலம் நடத்தப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பிணை சொத்து **"எங்கே உள்ளது என்பதன் அடிப்படையில்"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளது என்பதன் அடிப்படையில்"** விற்கப்படும்.
3. பொது மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, உத்தேசித்துள்ள வாங்குபவர்கள் / ஏலதாரர்கள் ஏல படிவத்தை, திருப்பிவிடக்கூடிய பிணை சொத்தின் ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அத்துடன் பான் அட்டை, நிறுவனம் என்னும் நிலையில் குழு தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்களை **12/09/2023** அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. பொது மின்னணு ஏலத்தில் வெற்றி பெற முடியாத இதர அனைத்து ஏலதாரர்களின் பிணை உறுதிப் பணம் வைப்பு தொகை பொது மின்னணு ஏலம் முடிவுற்ற 7 நாட்களுக்குள்ளாக எல்&டி ஃபைனான்ஸினால் திருப்பி அளிக்கப்படும். பிணை உறுதிப் பணம் வைப்பு தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
5. மின்னணு ஏலத்தில் வெற்றி பெறும் வாங்குபவர்/ஏலதாரர் அவரது/அதன் ஆஃபரில் 25% தொகையை (இஎம்டி உட்பட) எல்&டி பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்கதாக டி.டி./பி. ஓ மூலம் **13/09/2023** தேதி அன்று 18.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு அதாவது ஏல தேதி அன்று அல்லது அடுத்த அலுவல் நாளில் அதாவது **14/09/2023** அன்று செலுத்தப்பட்டு அந்த பொசிட் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக எல்&டி பைனான்ஸ் லிட் நிறுவனத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் விற்பனை தோல்வி அடைந்து விட்டதாக கருதப்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரரின் இஎம்டி பறிமுதல் செய்யப்படும். வாங்கும் விலையில் மீதி தொகை அதாவது 75% வாங்குபவரால் எல்&டி ஹவுசிங் லிமிடெட்டுக்கு, அசையா சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் பதினைந்தாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்பாக அல்லது சட்டப்பிரிவுகளின்படி இத்தகைய நீட்டிக்கப்படும் காலவரம்பிற்குள் செலுத்தப்பட வேண்டும்.
6. சொத்தை பார்வையிட அல்லது கூடுதல் தகவல்களுக்கு, ஆர்வமுள்ள ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளலாம். **அவரது பெயர் - செல்வமணி சந்தர், தொடர்பு எண். 8072820646 எல்&டி ஃபைனான்ஸ் லிட் - கே.ஜி.என் டவர்ஸ், 5வது தளம், எண்.62, எத்திராஜ் சாலை, எழும்பூர், சென்னை - 600105, மற்றும் சந்தோஷ் திவாரி, தொடர்பு எண். 9920490126, எல்&டி பைனான்ஸ் லிட், அலுவலகம்: 5வது மாடி, பிருந்தாவன் பில்டிங், பிளாட் எண் 177, கலினா, சிஎஸ்டி ரோடு, மெர்சிடிஸ் ஷோரூம் அருகில், சாந்தாக்குரூஸ் (எஸ்ட்), மும்பை - 400 098.** மின்-ஏலத்தின் எந்தக் கட்டத்திலும், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஏலத்தை ஏற்கலாம்/நிராகரிக்கலாம்/மாற்றலாம்/ரத்து செய்யலாம் அல்லது மின்-ஏலத்தை எந்தக் காரணமும் தெரிவிக்காமல், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி ஒத்தி வைக்கலாம்.
7. வெற்றி பெற்ற வாங்குபவர்/ஏலதாரர் சொத்தை தன்னுடைய பேரில் சாதகமாக மாற்றிக்கொள்ள பொருந்தும் சட்டத்தின் படி, ஏதேனும் சட்டபூர்வ நிலுவைத் தொகைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், முத்திரை வரி, பதிவு கட்டணங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. மேற்கண்ட பாக்கித் தொகைகளுக்கு பொறுப்பான வாங்குபவர்/உத்தரவாதிகள் இந்த விற்பனை அறிவிப்பை, பொது மின்னணு ஏல விற்பனையை நடத்த, செக்யூரிடி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ் விதி 8(6) கீழ் ஒரு அறிவிப்பாக கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. கடன் வாங்குபவர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) மேலே குறிப்பிட்டபடி கடன் நிலுவையில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் மேற்கூறிய மின்னணு ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். அவ்வாறு செலுத்தத் தவறினால், எல்&டி பைனான்ஸ் லிமிடெட், சர்ஃபேஸி சட்டம், 2002 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சொத்தை விற்கும்.
10. கடன்தாரர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) / பொது மக்கள் எல்&டி பைனான்ஸ் லிமிடெட் இடும் முன்னரே எழுத்துப்பூர்வமான அனுமதி பெறாமல் சம்பந்தப்பட்ட பிணைய சொத்துக்களை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளை கையாள்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர்.

தேதி: 10.08.2023
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

ZUARI FARMHUB LTD.

Regd. Office: Jai Kisaan Bhawan, Zuarinagar, Goa - 403726, INDIA

100% நீரில் கரையும் உரங்களின் சேமிப்பு மற்றும் விற்பனைக்கான அறிவிப்பு

FarmHUB

ஆணை எண். 24 அக்டோபர் 2015 தேதியிட்ட 2900 (E) வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது மற்றும் அதன் பிறகு திருத்தம், ஜுவாரி ஃபார்ம்ஹப் லிமிடெட். (ZFL) தமிழ்நாடு மாநிலத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 100% நீரில் கரையக்கூடிய உரங்களின் சேமிப்பு மற்றும் விற்பனையை தொடங்கும்.

	Grades	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25
	Specification / Composition	NPKS with Micronutrients 15:05:20:06	NPKS with Micronutrients 15:10:15:05	NPKS with Micronutrients 14:06:21:04	NPKS with Micronutrients 12:08:24:03	NPKS with Micronutrients 12:27:00:08	NPK with Micronutrients 05:14:30	NPK with Micronutrients 05:30:28	NPKS with Micronutrients 05:05:44:7.0	NPKS with Micronutrients 00:20:40:8.0	NPK with Micronutrients 05:25:35	NPK 15:05:20	NPK 15:10:15	NPK 14:06:21	NPK 12:08:24	NPK 12:27:00	NPK 05:14:30	NPK 05:30:28	NPK 05:05:44	NPK 00:20:40	NPK 05:25:35	NPK 15:15:15	NPK 05:25:15	NPK 06:12:36	NPK 28:28:0	NPK 14:14:14
1	Moisture per cent by weight, maximum	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5
2	Total Nitrogen per cent by weight, minimum	15.0	15.0	14.0	12.0	12.0	5.0	5.0	5.0	-	5.0	15.0	15.0	14.0	12.0	12.0	5.0	5.0	5.0	-	5.0	15.0	5.0	6.0	28.0	14.0
3	Water soluble Phosphorous(as P2O5) per cent by weight, minimum	5.0	10.0	6.0	8.0	27.0	14.0	30.0	5.0	20.0	25.0	5.0	10.0	6.0	8.0	27.0	14.0	30.0	5.0	20.0	25.0	15.0	25.0	12.0	28.0	14.0
4	Water soluble Potassium(as K2O) per cent by weight, minimum	20.0	15.0	21.0	24.0	-	30.0	28.0	44.0	40.0	35.0	20.0	15.0	21.0	24.0	-	30.0	28.0	44.0	40.0	35.0	15.0	15.0	36.0	-	14.0
5	Sodium(as Nacl) per cent by weight on dry basis, maximum	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5
6	Matter insoluble in water per cent by weight, maximum	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5
7	Sulphur (as S) per cent by weight, minimum	6.0	5.0	4.0	3.0	8.0	-	-	7.0	8.0	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
8	Magnesium(as MgO) per cent by weight, minimum	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
9	Zinc (as Zn) per cent by weight, minimum	1.0	1.0	1.0	1.0	1.0	1.0	1.0	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
10	Iron (as Fe) per cent by weight, minimum	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
11	Boron(as B) per cent by weight, minimum	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.5	0.1	0.1	0.1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
12	Molybdenum (as Mo) per cent by weight, minimum	-	-	-	0.001	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
13	Total chloride(as Cl) per cent by weight on dry basis, max	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5	1.5
14	Lead(as Pb) per cent by weight, maximum	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003	0.003
15	Cadmium(as Cd) per cent by weight, maximum	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025	0.0025
16	Arsenic(as As) per cent by weight, maximum	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01	0.01